**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.79** **நாள் : 17.06.2019**

**தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழி பொருட்களின் பயன்பாட்டை முற்றிலும் தவிர்ப்பது மற்றும் பயன்படுத்துவோர் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு.ஷம்பு கல்லோலிக்கர், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

*******

நாம் அன்றாட வாழ்வில் உபயோகிக்கும் பிளாஸ்டிக் கைப்பைகள் மற்றும் தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்கள் நம் சுற்றுச்சூழலைச் சேதப்படுத்துவதோடு மனித இனத்திற்கும், தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கும் பெரும் சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்துகிறது.

இன்றைய காலக்கட்டத்தில் சுற்றுச்சூழல் மாசடைவதற்கு பிளாஸ்டிக் பொருட்கள் மிகப்பெரும் பங்கு வகிக்கின்றன. வருங்கால சந்ததியினரின் நலனை கருத்தில் கொண்டும், பிளாஸ்டிக் மாசினால் ஏற்படும் அபாயகரமான விளைவுகளை கருத்தில் கொண்டும், ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களால் ஏற்படும் கேடுகளிலிருந்து சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கவும், மக்களின் மனப்பான்மை மற்றும் பழக்கவழக்கங்களில் மாற்றத்தை ஏற்படுத்தவும், உலக சுற்றுச்சூழல் தினமான 05.06.2018 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் 01.01.2019 முதல் தடிமன் பாகுபாடின்றி ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களை முற்றிலும் தடைசெய்வதற்கு அறிவிக்கப்பட்டு, அதனடிப்படையில் அரசாணை வெளியிடப்பட்டது.

“பிளாஸ்டிக் மாசில்லா தமிழ்நாடு” உருவாகிட தமிழ்நாடு அரசால் தடைசெய்யப்பட்டுள்ள ஒருமுறை மட்டுமே பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களின் தடை அறிவிப்பின் மீதான நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டம் இன்று (17.06.2019) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சி பகுதிகளில் தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழி பொருட்களின் பயன்பாட்டை முற்றிலும் தவிர்ப்பது மற்றும் பயன்படுத்துவோர் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு.ஷம்பு கல்லோலிக்கர், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (17.06.2019) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தும் நிறுவனங்கள் மீது அபராதம் விதிக்கவும், தொடர்ந்து பயன்படுத்தும் வணிக நிறுவனங்களின் உரிமத்தை ரத்து செய்யவும், ஏற்கனவே அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களை **உபயோகம் மற்றும் விநியோகிக்கும் நிறுவனங்களுக்கு** முதல் முறை ரூ.25,000/– அபராதமும், இரண்டாம் முறை ரூ.50,000/– அபராதமும், மூன்றாம் முறை ரூ.1 இலட்சம் அபராதமும்,

இத்தகைய பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தி **உபயோகம் மற்றும் விநியோகிக்கும் பெரிய வர்த்தக நிறுவனங்களான பேரங்காடிகள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகளுக்கு** முதல் முறை ரூ.10,000/– அபராதமும், இரண்டாம் முறை ரூ.20,000/– அபராதமும், மூன்றாம் முறை ரூ.25,000/– அபராதமும்,

**நடுத்தர வர்த்தக நிறுவனங்களான மளிகைக் கடைகள் மற்றும் மருந்து கடைகளுக்கு** முதல் முறை ரூ.1,000/– அபராதமும், இரண்டாம் முறை ரூ.2,000/– அபராதமும், மூன்றாம் முறை ரூ.5,000/– அபராதமும்,

மூன்று முறை அபராதம் விதித்த பின்பும், தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தும் மேற்கண்ட நிறுவனங்களின் வணிக உரிமத்தை ரத்து செய்யவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், இதுபோன்ற தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பயன்படுத்தும் **சிறிய கடைகளுக்கு** முதல் முறை ரூ.100/– அபராதமும், இரண்டாம் முறை ரூ.200/– அபராதமும், மூன்றாம் முறை ரூ.500/– அபராதமும் விதிக்கப்பட்டு, மூன்று முறை அபராதம் விதித்தப்பின் மீண்டும் பயன்படுத்தும் சிறிய வணிக கடைகளின் மீது சாலையோர வியாபாரிகள் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழகத்தில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் இதுநாள்வரை 820.50 மெட்ரிக் டன் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, ரூ.158.69 இலட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அரசின் ஆணையை மீறி தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும், அவற்றிற்கு பதிலாக மாற்றுப்பொருட்களை பயன்படுத்தி சுற்றுச்சூழலை பாதுகாக்க பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு இக்கூட்டத்தில் உத்தரவிடப்பட்டது.

இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாக ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள், பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.எஸ்.பழனிச்சாமி, இ.ஆ.ப., அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**